DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அலங்காரம் | Caste | : | |
| Husband Name | : | ஆறுமுகம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **22.06.2026.**

**PW - 12**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் விழுப்புரம் மாவட்டம், கல்பட்டு கிராமம், ராகவன் பேட்டையில் வசிக்கிறேன். அ.சா.11 ஆறுமுகம் எனது கணவர். சாட்சிகள் பொன்னியம்மாள், எல்லம்மாள் ஆகியோர் எங்களது மகள்கள். வழக்கில் இறந்துபோன பிரபு என் மகன். ஆஜர் எதிரியை தெரியும். பிரபுவிற்கு சித்ரா என்பவருடன் முதலில் திருமணம் நடந்தது. அவருடன் வாழ்ந்துவிட்டு பின்பு பிரபு எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார். என் மகன் பிரபு இறப்பதற்கு முன்பு முசிறிக்கு அருகே உள்ள செங்கல் சூளையில் வேலை செய்தார். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு, ரேகா மற்றும் 3 பேர் சேர்ந்து 4 பேராக பிரபுவின் பின்புறம் இரும்பு பைப்பால் அடித்து, போட்டுவிட்டதாக சொன்னார்கள். பிரபு சித்ரா என்ற பெயரை பச்சைக் குத்தியிருந்தார். எதிரி எங்களிடம் 4 பேர் சேர்ந்து பிரபுவை அடித்துப்போட்டதாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலிசார் விசாரித்தபோது நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் சொன்னேன். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு, ரேகா மற்றும் 3 பேர் சேர்ந்து 4 பேராக பிரபுவின் பின்புறம் இரும்பு பைப்பால் அடித்து, போட்டுவிட்டதாக சொன்னார்கள் என்றும், எதிரி எங்களிடம் 4 பேர் சேர்ந்து பிரபுவை அடித்துப்போட்டதாக சொன்னார் என்றும் முதல்விசாரணையில் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த விவரமும் எதிரி எங்களிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகன் இறப்பிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் மகன் எப்படி இறந்தார் என்பதே எங்களுக்கு தெரியாது என்றும், போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.